## சாட்சியின் வாக்குமூலம்

## திருவள்ளூர் மாவட்ட முதன்மை மற்றும் அமர்வு நீதிமன்றம்

**அசல் மனு எண் : 318/2018**

**19.04.2023**

**வாதி தரப்பு சாட்சி 1 : Sivanandham, S/o. Muthukannu**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : | ஜாதி | : |
| தந்தை பெயர் | : | தொழில் | : |
| கிராமம் | : | சமயம் | : |
| வட்டம் | : | வயது | : |

சாட்சி சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார்

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

நான் தற்போது சிவில் காண்டிராக்ட் தொழில் செய்து வருகிறேன். எனது ஒருவரின் வருமானத்தை வைத்து தான் எனது குடும்பத்தை நடத்தி வருகிறேன். பிரதிவாதி பள்ளிக்கூடம் நடத்தி வருகிறார் என்றால் சரிதான். அந்த பள்ளிக்கூடத்தின் கட்டுமான பணியை நான் செய்யவில்லை. பிரதிவாதியை சுரேஷ் என்ற நபர் மூலம் தெரியும் என்றால் சரிதான். சுரேஷ் மூலமாகத்தான் பிரதிவாதி என்னிடம் கடன் கேட்டார், நேரடியாக கேட்கவில்லை. சுரேஷ் எனக்கு மாப்பிள்ளை முறை. 2015ம் வருடம் சுரேஷ் பிரதிவாதிக்காக என்னிடம் கடன் கேட்டார். கடன் கொடுக்கும்போது தான் பிரதிவாதியை நான் பார்த்தேன். அதன்பிறகு நான் பிரதிவாதியை

பார்க்கவில்லை. சுரேஷிடம் பணத்தை கொடுத்து பிரதிவாதியிடம் பணம் கொடுக்கப்பட்டது, அந்த இடத்தில் நான் இருந்தேன். பிரதிவாதிக்கு 08.08.2018ல் நான் வழக்கறிஞர் அறிவிப்பு (வதசா.ஆ.3) அனுப்பினேன். அந்த வழக்கறிஞர் அறிவிப்பில் என்ன விவரங்கள் இருந்தது என்று எனக்கு தற்போது ஞாபகமில்லை. அந்த வழக்கறிஞர் அறிவிப்பில் பிரதிவாதி என்னிடம் நேரடியாக வந்து பணம் கேட்டதாக சொல்லியுள்ளேன் என்றால் எனக்கு ஞாபகமில்லை. எனது பிரமாண வாக்குமூலத்தில் பிரதிவாதியை 5 வருடங்களாக தெரியும் என்று சொல்லியுள்ள விவரம் தவறு என்றால் சரியல்ல. எனது வழக்கறிஞர் அறிவிப்பு, பிராது மற்றும் நிரூபண வாக்குமூலத்தில் பிரதிவாதிக்கு கொடுத்ததாக சொல்லும் தொகை எனக்கு எப்படி வந்தது பற்றிய விவரங்கள் சொல்லவில்லை என்றால் எனக்கு ஞாபகமில்லை. சுரேஷ் தாவா அடைமான பத்திர தேதியன்றே ஒரு பதிவு செய்யப்படாத அடைமான பத்திரம் எழுதிக்கொண்டார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. சுரேஷ் பதிவு செய்யப்படாத அடைமான பத்திரம் எழுதிக்கொண்டார் என்றாலும் அந்த ஆவணத்தில் கண்ட சொத்து விவரமும் தாவா அடைமான பத்திரத்தில் கண்ட சொத்து விவரமும் ஒரே சொத்து என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. சுரேஷ் பிரதிவாதிக்கு தான் எதுவும் கடன் கொடுத்தாரா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. எனது வழக்கறிஞர் அறிவிப்பு மற்றும் பிராதில் சுரேஷ் பிரதிவாதிக்கு ரூபாய் ஐந்து லட்சம் கொடுத்ததாக நான் சொல்லியுள்ள விவரம் உண்மைக்கு புறம்பானது என்று சொன்னால் சரியல்ல. சுரேஷிடம் நான் 5 லட்ச ரூபாய் கொடுத்து பிரதிவாதிக்கு கொடுக்கச் சொன்னேன். பிரதிவாதி கேட்பதாக சுரேஷ் என்னிடம் கூறியதால் 5 லட்ச ரூபாயை நான் கொடுத்தேன். அந்த 5 லட்ச ரூபாய்க்கு நான் ஆவணம் எதுவும் எழுதி வாங்கவில்லை. தாவா தொகையான ரூபாய் 10 லட்ச தேதியில்

ரூபாய் 5 லட்சத்தை கொடுக்கவில்லை. வேறொரு தேதியில் கொடுத்தேன். தேதி ஞாபகமில்லை. வழக்கறிஞர் அறிவிப்பில் அந்த 5 லட்ச ரூபாய்க்கு அசல் பத்திரத்தை பிரதிவாதியிடம் பெற்றுக்கொண்டேன் என்று சொல்லியுள்ள விவரம் பற்றி எனக்கு தற்போது ஞாபகமில்லை. பிராதில் பிரதிவாதி அசலோ, வட்டியோ தரவில்லை என்று கூறியுள்ளேன். எனது கூற்றுப்படி பிரதிவாதிக்கு நான் 15 லட்ச ரூபாய் கடன் கொடுத்துள்ளேன். நான் பிரதிவாதிக்கு ரூபாய் 10 லட்சம் தான் கடனாக கொடுத்தேன் என்றாலும் அதற்கு ஆதரவாகத்தான் தாவா அடைமான பத்திரம் எழுதப்பட்டது என்றாலும் வேறொரு தொகையான ரூபாய் 5 லட்சம் எதுவும் பிரதிவாதிக்கு கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல. பிரதிவாதியிடம் சுரேஷ் வட்டித்தொகை வாங்கித்தருவதாக கூறினார். ஆனால், அவ்வாறு தொகை எதுவும் வாங்கித்தரவில்லை. 31.03.2017, 11.04.2016, 10.05.2016, 03.01.2016 ஆகிய தேதிகளில் சுரேஷ் பிரதிவாதியின் பள்ளிக்கூடத்திற்கு சென்று ரூபாய் 3 1/2 லட்சம் வாங்கியுள்ளார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. மேற்படி அடைமான பத்திரத்தில் வட்டித்தொகை மற்றும் அசல் தொகையை ஆங்கில தேதி 10க்குள் கொடுக்க வேண்டும் என்ற சரத்து உள்ளது என்றால் சரிதான். ஒரு வருட காலத்திற்குள் முழுத்தொகையையும் கொடுத்து மீட்க வேண்டும் என்ற சரத்து உள்ளது என்றால் சரிதான். பிரதிவாதி மாத மாதம் வட்டி மற்றும் அசல் தொகையை 10ம் தேதிக்குள் சரியாக கொடுத்து வந்தார் என்றாலும் அதன் காரணமாக வழக்கறிஞர் அறிவிப்பிற்கு இரண்டு வருடங்களுக்கு முன்பாக நான் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றாலும் சரியல்ல. பிரதிவாதி அசல் முழுவதையும் கொடுத்துவிட்டதாகவும் வட்டித்தொகை அதிகமாக கேட்பதாக என் மீதும் சுரேஷ் மீதும் அம்பத்தூர் சாரக காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றால் சரியல்ல. அந்த புகாரின் அடிப்படையில் சுரேஷை விசாரித்தார்கள்

என்றாலும் சுரேஷ் அடைமான பத்திரத்தை ரத்து செய்து தருவதாக கூறினார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்தை பொறுத்தே சுரேஷ் பிரதிவாதி மீது வேறொரு அசல் வழக்கு தாக்கல் செய்தார் என்று சென்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. பிரதிவாதி பணம் முழுவதையும் கொடுத்துவிட்டார் என்றாலும் அதன் காரணமாக தாவா வழக்கு நிலைநிறுத்தத்தக்கது அல்ல என்றாலும் சரியல்ல.